இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 85 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 19 – புதன்கிழமை 05 நவம்பர் 2025 – மதுரை 16 + 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 85: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 19 - Wednesday 05 November 2025 - Madurai 16 +8 Pages ₹ 5.00


## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் கழகத்தில் இணைந்தார்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன் அவர்கள் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார். உடன் கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருநெல்வேலி மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், வழக்கறிஞர் சலீம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## எம்.எல்.ஏ. பதவியையும் ராஜினாமா செய்தார்!

**சென்னை, நவ. 5 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (4.11.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் மற்றும் மூத்த வழக்கறிஞர் அப்துல் சலீம் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

அதுபோது கழக பொதுச்செயலாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மனோஜ் பாண்டியன், திராவிட கொள்கைகளையும், மாநில உரிமைகளையும் பாதுகாக்கும் ஒரே தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் என புகழாரம் சூட்டினார்.

### பா.ஜ.க.வின் கிளை கழகமாக அ.தி.மு.க. செயல்படுகிறது!

பா.ஜ.க.வின் கிளை கழகமாக அ.தி.மு.க. செயல்பட்டு வருகிறது என்றும், தன்னையும், தனது குடும்பத்தையும் பாதுகாக்க பா.ஜ.க.,விடம் அ.தி.மு.க.வை எடப்பாடி பழனிசாமி அடகு வைத்துவிட்டார் என்றும் மனோஜ் பாண்டியன் குற்றம் சாட்டினார்.

மேலும், அவர் கூறுகையில், “திராவிட கொள்கைகளை பின்பற்றும் இயக்கமான தி.மு.க.வில் இணைந்துள்ளேன்; தமிழக உரிமைகளை அடகு வைக்காத தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

### தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்காதவர் எடப்பாடி!

தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்காதவர் எடப்பாடி பழனிசாமி. பா.ஜ.க.வுடன் எந்தவொரு காலத்திலும் கூட்டணி வைக்க மாட்டேன் என்று கூறிவிட்டு தற்போது எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தார் என்று தெரியவில்லை. இது குறித்து இன்று வரை பதில் இல்லை. எந்த கொள்கைக்காக இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதோ, அது காற்றில் விடப்பட்டுள்ளது.

அ.தி.மு.க.வை தோற்றுவித்த தலைவரும், அதற்குப் பின்னால் அந்த இயக்கத்தை பாதுகாத்து வளர்த்த ஜெயலலிதாவும் எந்தச் சூழ்நிலையிலும் அ.தி.மு.க.வை யாருக்கும் அடகு வைக்கவில்லை. அவர்கள் காலத்தில் இருந்த அ.தி.மு.க. தற்போது இல்லை.

இன்றைய அ.தி.மு.க. என்பது வேறு. மற்ற இயக்கத்தை நம்பி, அவர்களின் சொல்படி நடக்கிறது. பா.ஜ.க.வின் கிளைக் கழகமாக அ.தி.மு.க. செயல்படுகிறது. இன்று (நேற்று) மாலை 4 மணிக்கு எனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய இருக்கிறேன்” என்றும் மனோஜ் பாண்டியன் குறிப்பிட்டார்.

---

## மார்ச் 2ம் தேதி +2 தேர்வு தொடங்குகிறது!

# 10, 12ம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணை!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்!

**சென்னை, நவ. 5 -**

**தமிழகத்தில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான அட்டவணை மற்றும் தேர்வு முடிவுகள் வெளியாகும் தேதி குறித்த அறிவிப்புகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்.**

சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் நேற்று செய்தியாளர்களை சந்தித்து வெளியிட்ட அறிவிப்பில், “2026ம் ஆண்டு மார்ச் 2ம் தேதி முதல் மார்ச் 26ம் தேதி வரை 12ம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறும். பிளஸ் 2 செய்முறை தேர்வுகள் பிப்ரவரி 9 முதல் பிப்ரவரி 14ம் தேதி வரை நடைபெறும். மே.8ம் தேதி பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியாகும்.

மார்ச் 3ம் தேதி முதல் மார்ச் 27ம் தேதி வரை பிளஸ் 1 தேர்வுகள் நடைபெறும். 11ம் வகுப்பில் தவறிய மாணவர்களுக்கு மார்ச் 3ம் தேதி முதல் மறுதேர்வு நடைபெறும். 11ம் வகுப்புக்கான செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 21 வரை நடைபெறுகிறது.

மார்ச் 11ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும். 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 20ம் தேதி வெளியாகிறது. 12ம் வகுப்பு பொதுத் தேர்வை 8.07 லட்சம் மாணவர்களும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை 8.70 லட்சம் மாணவர்களும் எழுத உள்ளனர்.

கணக்குப்பதிவியல் தேர்வுகளுக்கு மாணவர்கள் கால்குலேட்டர் எடுத்துச் செல்லலாம். ஒவ்வொரு தேர்வுக்கும் 3 முதல் 5 நாட்கள் இடைவெளி இருக்கும் வகையில் தேர்வு அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.” எனத் தெரிவித்தார்.

---

### பீகாரில்

## முதல்கட்ட தேர்தல் பிரச்சாரம் நிறைவு!

பாட்னா, நவ. 5 –

பீகாரில் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது. இதன் காரணமாக மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

243 தொகுதிகளைக் கொண்ட பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நவம்பர் 6 மற்றும் 11ம் தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் நவம்பர் 6ல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 18 மாவட்டங்களில் உள்ள 121 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நேற்று மாலை 5 மணியுடன் பிரச்சாரம் முடிவடைந்தது. இந்தச் சூழலில், வாக்காளர்களை கவரும் வகையில் மற்றும் இந்தியா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று மகா கூட்டணியின் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் கயா மற்றும் ஔரங்காபாத்தில் பிரச்சாரம் செய்தனர். மகாகட்பந்தனின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி பிரசாத் யாதவ், சமஸ்திபூர், பெகுசராய், சஹர்சா, தர்பங்கா, முசாபர்பூர் மற்றும் வைஷாலி மாவட்டங்களில் உள்ள பல்வேறு தொகுதிகளில் 17 தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

---

## தேசிய ஜனநாயகக் கூட்டணி வேரோடு பிடுங்கப்படும்!

# பீகாரில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!

### தேஜஸ்வி யாதவ் பேட்டி!

பாட்னா, நவ. 5 -

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் நவ. 6, 11 என 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலை 5 மணியுடன் முடிவடைந்தது. இந்நிலையில், தலைநகர் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரும் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவருமான தேஜஸ்வி யாதவ், “பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் மகா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி. நவ.14ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

நவ. 18ம் தேதி நாங்கள் பதவியேற்போம். இம்முறை பீகாரில் இருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி வேரோடு பிடுங்கி எறியப்படும்.



நாங்கள் ஏற்கெனவே பெண்களுக்காக அறிவித்த திட்டங்களை தாய்மார்களும் சகோதரிகளும் அதிக அளவில் வரவேற்றுள்ளனர். வரும் ஜனவரி 14ம் தேதி மகர சங்கராந்தி பண்டிகை வர இருக்கிறது. இது மக்களுக்கு ஒரு புதிய ஆண்டு. பெண்களுக்காக நாங்கள் அறிவித்த திட்டத்தின் கீழ் மகர சங்கராந்தியின்போது பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.30,000 வரவு வைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மகர சங்கராந்தியை முன்னிட்டு இந்த நிதியுதவி வழங்கப்படும். அந்த வகையில் இந்த திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் நமது பெண்கள் ரூ.1.5 லட்சம் நிதி உதவி பெறுவார்கள். பணவீக்கம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியுதவி அவர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

பீகாரை கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம். இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை முன்னேற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் அமைந்த உடன், விவசாய பாசனத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். நெல் மற்றும் கோதுமைக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையுடன் கூடுதலாக முறையே ரூ.300 மற்றும் ரூ. 400 வழங்கப்படும். அரசு ஊழியர்கள், காவல்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் 70 கிலோ மீட்டர் சுற்றளவில் மட்டுமே பணியிட மாற்றம் செய்யப்படுவார்கள்.

பீகார் முழுவதும் நாங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறோம். முதல்கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்கான கடைசி நாள் இது. மக்கள் மாற்றத்துக்கான மனநிலையில் இருக்கிறார்கள். இந்த முறை பீகாரில் 20 ஆண்டுகளாக இருக்கும் ஆட்சியை மக்கள் அகற்றுவார்கள்.” என தெரிவித்தார்.

---

### தமிழகத்தில்

## நவ.9 வரை மிதமான மழை!

### சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, நவ. 5 -*

*தமிழகத்தில் நாளை முதல் நவ.9 வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:*

*தமிழகத்தில் நவ. 5ம் தேதி வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 6, 7 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களி லும், 8, 9 தேதிகளில் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*தமிழக கடலோர பகுதிகளில் மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதும் இல்லை. தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிக பட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் கலவை, திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் வளத்தி ஆகிய இடங்களில் தலா 3 செமீ, திருவண்ணாமலை மாவட்டம் போளூர், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம், அவலூர் பேட்டை ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.*

*இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*